DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 111/2021

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | சுப்பிரமணி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2025.

6-ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1, 3, 4, 5, 7, 8, 9 நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவர்களுக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-ம் எதிரி PT Warrant-ல் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் திருப்புவனம் கோட்டை பகுதியில் செட்டியார் தெருவில் குடியிருந்து வருகிறேன். நானும் எனது மனைவி இந்திராவும் தினசரி மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறோம். இவ்வழக்கில் இறந்து போன முத்து(எ) அஜித்குமார் எனது மகன் ஆவார். எனக்கு கலைச்செல்வி என்ற மகளும் உண்டு. எதிரிகள் அனைவரையும் எனக்குத்தெரியும். என் மகன் சம்பவத்தின் போது திருச்சி மாவட்டம் துறையூர் தாலுகா கண்ணனூரில் இமையம் பாலிடெக்னிக் கல்லூரியில் 2-ம் ஆண்டு Auto Mobile பிரிவில் படித்து வந்தார். கடந்த 02.09.2019-ம் தேதி உடல்நிலை சரியில்லாததால் படித்த காஸ்டலிலிருந்து எங்கள் ஊருக்கு வந்தார். அன்று மாலை அபி கிளினிக்குக்கு மருத்துவம் பார்க்க சென்றவர் தொடர்ந்து 2 நாட்கள் பார்த்து, உடல்நிலை சரியான நிலையில் 04.09.2019-ம் தேதி 8.30 மணி அளவில் Medical certificate மருத்துவரிடம் பெற்று மீண்டும் கல்லூரிக்கு செல்வதற்காக எங்களுடன் வந்தவர் certificate வாங்கிக்கொண்டு வீட்டிற்கு போவதற்காக போனார். நானும் எனது மனைவியும் இரவு 9.30 மணி வரை வீட்டிலிருந்தோம். அங்கு என் மகன் வராததால் நான் வீட்டில் பார்த்த போது ஊருக்கு செல்வதற்காக நான் அவருக்கு கொடுத்த ரூ.400 மற்றும் பேக் மற்றும் உடைகள் வீட்டிலேயே இருந்தது. என் மகன் அவரது செல்போனுடன் சென்றதால் எனது செல் போன் மூலமாக அதாவது என் செல்போன மூலம் நம்பர் 6384763974 என்ற என் மகனின்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:51:40 +0530

செல்போனிற்கு தொடர்பு கொண்டேன். அதில் ரிங் போனது பின்னர் கட் ஆகிவிட்டது. தொடர்ந்து நான் தொடர்பு கொண்ட போது நிரந்தரமாக கட் ஆகிவிட்டது. 2, 3 நாட்கள் என் மகனை காணவில்லை என உறவினர்கள் வீடுகளிலும், அக்கம் பககத்தில் உள்ளவர்கள் வீடுகளிலும் தேடிவிட்டு 07.09.2019-ம் தேதி திருப்புவனம் காவல்நிலையத்தில் என் மகன் காணாமல் போனது குறித்து புகார் கொடுத்தேன். மேலும், என் மகன் கடந்த ஆண்டு இராமேஷ்வரத்தில் வைத்து தொத்தன்குளம் முனியான்டி என்பவரை கொலை செய்துவிட்டதாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அது தொடர்பாக என் மகன் விடுதலை ஆனதால் இறந்துபோன முனியாண்டி தரப்பினரால் என் மகனுக்கு ஆபத்து என்று காவல்நிலைத்தில் தகவல் சொன்னேன். இந்நிலையில் காவல் துறையினர் பல இடங்களில் விசாரித்து கடந்த 14.09.2019-ம் தேதி மதியம் நானும் என் மனைவியும் வீட்டிலிருந்த போது ஆய்வாளர் என்னை அழைத்ததன் பேரில் திருப்புவனம் வைகை ஆற்று பகுதிக்கு சென்றோம். அங்கு திவாகர்(எ) ஆப்பை என்பவரை பிடித்து வைத்திருந்தார்கள். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் முனியாண்டியை கொலை செய்தது தொடர்பாக ஆப்பை என்பவரும் முனியாண்டியின் தம்பி பூவலிங்கத்தின் மகன் சுந்தர் என்பவரும் முத்துப்பாண்டி மகன் மண்டை தினேஷ் என்பரும் பொண்ணுத்துறை மகன் அய்யனார் என்பவரும் திருப்புவனத்தை சேர்ந்த பாம்பு மணி முருகேசன் மகன் லுசு அஜெய் இராமநாதன் மகன் சிவமணி, மாரி மகன் சங்கர், சோமசுந்தரம் மகன் அருண் ஆகியோர் சேர்ந்து என் மகன் காணமாமல் போன இரவு 10.30 மணி அளவில் என் மகனை ஆற்றுப்படுகையில் ஓடவிடாமல் தடுத்து பிடித்துக்கொண்டு கத்தியால் மாறி மாறி குத்தி தலையில் கல்லைப்போட்டு கொலை செய்து ஆற்றுக்குள் புதைத்துவைத்திருப்பதாக திவாகர் கொடுத்து வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் காட்டிய இடத்தில் காவல்துறையினர் வட்டாட்சியரை வைத்து உரிய அலுவலர் மூலம் காவல்துறையினர் முன்னிலையில் அவர் காட்டிய இடத்தை தோண்டி பார்த்த போது என் மகன் காணமாமல் போன அன்று உடுத்தியிருந்த உடைகளுடன் புதைக்கப்பட்டிருந்த உடலை வெளியே எடுத்தார்கள். அதை நான் அடையாளம் காட்டினேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். இந்த விவரங்களை கூறியதுடன் முனியாண்டி கொலையில் என் மகனை சம்பந்தப்படுத்தியதால் தான் ஊருக்கு வராமல் வெளியூரில் படிக்க வைத்தேன். என்றும், மேற்படி எதிரிகளால் என் மகனுக்கு ஆபத்து இருக்கிறது என்பதை போலீசாரிடம் நான் ஏற்கனவே என் மகன் காணமாமல் போன அன்றே சொல்லியுள்ளேன். நான் கடந்த 07.09.2019- அன்று என் மகனை காணவில்லை என்று திருப்புவனம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான். அது **அ.சா.ஆ. 1**.-ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்த ஆய்வாளர் என்னை விசாரித்தார். இங்கு என்னிடம்

காட்டப்படும் இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் முழுக்கை சட்டை, வெள்ளைக்கலர் முன்டாபனியன், கருப்புக்கலர் டிராக் சூட் பேண்ட, Pomer லேபிள் ஒட்டிய ஜட்டி,' ஆகியவை என் மகன் காணமால் போன போது அணிந்திருந்த உடைகள் தான். அவை முறையே 1 முதல் 4 வரை ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.**

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:51:48 +0530

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**சிவகங்கை**

# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

## S.C.No. 111/2021

## PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | இந்திரா | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2025.**

6-ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1, 3, 4, 5, 7, 8, 9 நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவர்களுக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-ம் எதிரி PT Warrant-ல் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் திருப்புவனம் கோட்டை பகுதியில் செட்டியார் தெருவில் குடியிருந்து வருகிறேன். நானும் எனது கணவர் அ.சா.1-ம் தினசரி மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறோம். இவ்வழக்கில் இறந்து போன முத்து(எ) அஜித்குமார் எனது மகன் ஆவார். எனக்கு கலைச்செல்வி என்ற மகளும் உண்டு. எதிரிகள் அனைவரையும் எனக்குத்தெரியும். என் மகன் சம்பவத்தின் போது திருச்சி மாவட்டம் துறையூர் தாலுகா கண்ணனூரில் இமையம் பாலிடெக்னிக் கல்லூரியில் 2-ம் ஆண்டு Auto Mobile பிரிவில் படித்து வந்தார். கடந்த 02.09.2019-ம் தேதி உடல்நிலை சரியில்லாததால் படித்த காஸ்டலிலிருந்து எங்கள் ஊருக்கு வந்தார். அன்று மாலை அபி கிளினிக்குக்கு மருத்துவம் பார்க்க சென்றவர் தொடர்ந்து 2 நாட்கள் பார்த்து, உடல்நிலை சரியான நிலையில் 04.09.2019-ம் தேதி 8.30 மணி அளவில் Medical Certificate மருத்துவரிடம் பெற்று மீண்டும் கல்லூரிக்கு செல்வதற்காக எங்களுடன் வந்தவர் Certificate வாங்கிக்கொண்டு வீட்டிற்கு போவதற்காக போனார். நானும் எனது கணவரும் இரவு 9.30 மணி வரை வீட்டிலிருந்தோம். அங்கு என் மகன் வராததால் என் கணவர் வீட்டில் பார்த்த போது ஊருக்கு செல்வதற்காக என் கணவர் அவருக்கு கொடுத்த ரூ.400 மற்றும் பேக் மற்றும் உடைகள் வீட்டிலேயே இருந்தது. என் மகன் அவரது செல்போனுடன் சென்றதால் எனது செல் போன் மூலமாக அதாவது என் செல்போன மூலம் நம்பர் 6384763974 என்ற

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:51:54 +0530

என் மகனின் செல்போனிற்கு என் கணவர் தொடர்பு கொண்டார். அதில் ரிங் போனது பின்னர் கட் ஆகிவிட்டது. தொடர்ந்து என் கணவர் தொடர்பு கொண்ட போது நிரந்தரமாக கட் ஆகிவிட்டது. 2, 3 நாட்கள் என் மகனை காணவில்லை என உறவினர்கள் வீடுகளிலும், அக்கம் பககத்தில் உள்ளவர்கள் வீடுகளிலும் தேடிவிட்டு 07.09.2019-ம் தேதி திருப்புவனம் காவல்நிலையத்தில் என் மகன் காணாமல் போனது குறித்து என் கணவர் புகார் கொடுத்தார். மேலும், என் மகன் கடந்த ஆண்டு இராமேஷ்வரத்தில் வைத்து தொத்தன்குளம் முனியான்டி என்பவரை கொலை செய்துவிட்டதாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அது தொடர்பாக என் மகன் விடுதலை ஆனதால் இறந்துபோன முனியாண்டி தரப்பினரால் என் மகனுக்கு ஆபத்து என்று காவல்நிலைத்தில் என் கணவர் தகவல் சொன்னார். இந்நிலையில் காவல் துறையினர் பல இடங்களில் விசாரித்து கடந்த 14.09.2019-ம் தேதி மதியம் நானும் என் கணவரும் வீட்டிலிருந்த போது ஆய்வாளர் என் கணவரை அழைத்ததன் பேரில் நானும் எனது கணவரும் திருப்புவனம் வைகை ஆற்று பகுதிக்கு சென்றோம். அங்கு திவாகர்(எ) ஆப்பை என்பவரை பிடித்து வைத்திருந்தார்கள். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் முனியாண்டியை கொலை செய்ததது தொடர்பாக ஆப்பை என்பவரும் முனியாண்டியின் தம்பி பூவலிங்கத்தின் மகன் சுந்தர் என்பவரும் முத்துப்பாண்டி மகன் மண்டை தினேஷ் என்பரும் பொண்ணுத்துரை மகன் அய்யனார் என்பவரும் திருப்புவனத்தை சேர்ந்த பாம்பு மணி, முருகேசன் மகன் லுசு அஜெய் இராமநாதன் மகன் சிவமணி, மாரி மகன் சங்கர், சோமசுந்தரம் மகன் அருண் ஆகியோர் சேர்ந்து என் மகன் காணமாமல் போன இரவு 10.30 மணி அளவில் என் மகனை ஆற்றுப்படுகையில் ஓடவிடாமல் தடுத்து பிடித்துக்கொண்டு கத்தியால் மாறி மாறி குத்தி தலையில் கல்லைப்போட்டு கொலை செய்து ஆற்றுக்குள் புதைத்துவைத்திருப்பதாக திவாகர் கொடுத்து வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் காட்டிய இடத்தில் காவல்துறையினர் வட்டாட்சியரை வைத்து உரிய அலுவலர் மூலம் காவல்துறையினர் முன்னிலையில் அவர் காட்டிய இடத்தை தோண்டி பார்த்த போது என் மகன் காணமாமல் போன அன்று உடுத்தியிருந்த உடைகளுடன் புதைக்கப்பட்டிருந்த உடலை வெளியே எடுத்தார்கள். அதை எனது கணவர் அடையாளம் காட்டினார். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். இந்த விவரங்களை கூறியதுடன் முனியாண்டி கொலையில் என் மகனை சம்பந்தப்படுத்தியதால் தான் ஊருக்கு வராமல் வெளியூரில் படிக்க வைத்தேன். என்றும், மேற்படி எதிரிகளால் எங்கள் மகனுக்கு ஆபத்து இருக்கிறது என்பதை போலீசாரிடம் ஏற்கனவே எங்கள் மகன் காணமாமல் போன அன்றே என் கணவர் சொல்லியுள்ளார். என் கணவர் கடந்த 07.09.2019-ம் தேதி அன்று எங்கள் மகனை காணவில்லை என்று திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இது குறித்த

ஆய்வாளர் என்னை விசாரித்தார். இங்கு என்னிடம் காட்டப்படும் சான்றுபொருட்கள் 1 முதல் 4 தான் என் மகன் காணாமல் போன அன்று அணிந்திருந்த உடைகளாகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 111/2021

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | தென்னரசு | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2025.

6-ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1, 3, 4, 5, 7, 8, 9 நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவர்களுக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-ம் எதிரி PT Warrant-ல் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>**முதல் விசாரணை :**</u>

எனக்கு சொந்த ஊர் லாடனேந்தில் கிராமம் ஆகும். நான் பழையனூர் பிற்பட்டோர் மாணவர் விடுதியில் சமையலராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 06.03.2019-ல் காலை 11.00 மணியளவில் நான் என் வீட்டிலிருந்த போது அ.சா.1 சுப்பிரமணி என்ற என் மைத்துனரும் என் தங்கை அ.சா.2 இந்திராவும் என்னிடம் வந்து தன் மகன் அஜித்குமார் உடல்நிலை சரியில்லாமல் கல்லூரியிலிருந்து வந்திருப்பதாகவும், வந்தபோது அபி கிளினிக்கில் மருத்துவர் பார்த்ததாகவும், பின் மருத்துவ சான்று பெற்று மருத்துவரிடம் Certificate வாங்கிக்கொண்டு கடந்த 04.09.2019-ல் இரவு 8.30 மணிக்கு வீட்டிற்கு தங்களுக்கு முன்பாக சென்றவர் தானும் தன் மனைவியம் மார்க்கெட்டில் இருந்து இரவு 9.30 மணிக்கு வீடு சென்ற பின்னரும் தன் மகனை காணவில்லை என்றும் தங்களது தொலைபேசி மூலம் அஜித்குமாரின் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு பல முறை பேசியபோதும் ஸ்விட்ச் ஆப் என்று வந்ததாகவும் என்னிடம் விவரம் சொல்லவே நான் என் வீட்டிற்கு வரவில்லை என்று சொல்லி நானும் பல இடங்களில் தேடிப்பார்த்தேன். இந்த விவரத்தை அஜித்குமார் உடல் கண்டு எடுக்கப்பட்ட பின் போலீசார் விசாரித்த போது என்னிடம் தன் மகனை காணவில்லை என்று சொன்ன விவரத்தை சொன்னேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:05 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:11 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை